TORONTO

## அணுகுவசதி கொண்ட மாநகரமாக ஓங்குவதற்கு
## ரொறன்ரோ மாநகரம் உறுதிபூண்டமை பற்றிய கூற்று

ரொறன்ரோ மாநகரம் பல்வேறு சமூகங்களையும், குழுமங்களையும் கொண்டது. மக்கள் அனைவரும் ஆற்றும் பணிகளை ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் மெச்சுகிறது. ரொறன்ரோ மாநகர மக்களின் பல்வண்மை அதனை வலுப்படுத்துகிறது என்று மாநகராட்சி மன்றம் கருதுகிறது.

வலுதளர்ந்தோரின் கண்ணியத்தையும், சுத்திரத்தையும் மதிக்கும் வண்ணம், அவர்களை அரவணைக்கும் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கும், மாநகர சேவைகள், திட்டங்கள் என்பவற்றை அனைவருக்கும் அளிப்பதற்கும் ரொறன்ரோ மாநகரம் உறுதிபூண்டுள்ளது.

வலுதளர்ந்த ஒன்ராறியோவாசிகள் அணுகுவசதிச் சட்டத்தின் (AODA) இலக்குகளை ரொறன்ரோ மாநகரம் ஆதரிக்கிறது. வலுதளர்ந்தோர் வாடிக்கையாளர் சேவை, தகவல் - தொடர்பாடல், வேலைவாய்ப்பு, கட்டிட சூழல், போக்குவரத்து உட்பட மேற்படி சட்டத்துக்கமைய வகுக்கப்பட்ட அணுகுவசதி நியமங்களின்படியே மாநகரம் அதன் கொள்கைகளையும், வழமைகளையும், நடைமுறைகளையும் வகுக்கும்.

வலுதளர்ந்தோரைக் குறைத்துமதித்து, மட்டுப்படுத்தும் உளப்பான்மை எனத்தக்க “ஆற்றல்சார் விரோதம்” என்பதைக் களைந்து, வலுதளர்ந்தோர் அணுகுவதற்கு ஏதுவான வடிவமைப்புகள், அனுகூலமான உளப்பான்மைகள் என்பவற்றை ஆதரித்து, அத்தகைய தடங்கல்களை ரொறன்ரோ மாநகரம் தொடர்ந்து அகற்றி வரும்.

மேற்படி கூற்றுக்கமைய தனது இலக்குகளை எய்தப் பாடுபடும் ரொறன்ரோ மாநகரம் தற்போதைய சட்டவாக்க விதிமுறைகளை நிறைவேற்றி, வலுதளர்ந்தோர் எதிர்கொள்ளும் தடங்கல்களைக் கண்டறிந்து, அகற்றி, தடுக்கும் அதன் சொந்தக் கொள்கைகளையும் இலக்குகளையும் எய்தி, தடங்கலற்ற மாநகரமாக ஓங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது

ரொறன்ரோ மாநகராட்சி மன்றம், ஆகஸ்ட் 2009.